# நாட்டு மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க இலங்கைக்கு பிரித்தானியா வலியுறுத்து!

அரசியலமைப்பிற்கு அமைவாக அதிகாரப்பகிர்வை நடைமுறைப்படுத்தவும், காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இலங்கையின் ஆரம்பக் கடப்பாடுகளை பிரித்தானியா வரவேற்றுள்ளது.

ஐ.நா.வுக்கான பிரித்தானியாவழனட நிரந்தரப் பிரதிநிதி சைமொன் மான்லே வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் அது சர்வதேசத் தரத்திற்கு அமைவாக இருப்பதை உறுதி செய்யுமாறும் அரசாங்கத்தை அந்த நாடு வலியுறுத்தியுள்ளது.

மேலும் அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைகளைப் பாதுகாக்குமாறும் இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா அழைப்பு விடுத்துள்ளது.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் சமூகங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியானது, கடந்த காலத்தை கையாள்வதில் போதுமான ஆதாரம், சுதந்திரம் மற்றும் வெளிப்படையான அணுகுமுறையின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது, என்றும் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் அவசியம் எனவும், நிலைமாறுகால நீதியில் முன்னேற்றம் காண்பதற்கான அர்ப்பணிப்புகளை எதிர்பார்ப்பதாகவும் பிரித்தானியா கூறியுள்ளது.



மேலும், எந்தவொரு செயல்முறையும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் ஆதரவைக் கொண்டிருப்பதையும், கடந்தகாலப் பரிந்துரைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுவதையும், சர்வதேசத் தரங்களுக்கு இணங்குவதையும் உறுதிப்படுத்துமாறும் பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது. (க)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 24 செவ்வாய்க்கிழமை 12.09.2023 கதிர் 70







## பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை இலங்கை நிறுத்த வேண்டும்! – ஐரோப்பிய ஒன்றியம்

பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் சர்வதேச தரத்திற்கு அமைய பின்பற்றும்வரை அவற்றைப் பயன்படுத்துவதை இடைநிறுத்திவைக்க வேண்டும், என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல், பலவந்தமாகக் காணாமல்செய்யப்பட்ட பல சம்பவங்களிற்கு தீர்வை காணவும் அது வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 54 அமர்வு ஆரம்பமாகியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை குறித்த அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளது.

அமைதியான ஒன்றுகூடல் உரிமையை உறுதிசெய்யவும் அவர்களுக்கு எதிராகப் பலத்தைப் பிரயோகிப்பதைத் தவிர்க்குமாறும் ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது. பொறுப்புக்கூறல் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலை நிறுத்த வேண்டும், என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. (04)

## கொக்குத்தொடுவாய்ப் புதைகுழியில் ஒன்றோடு ஒன்றாக பல அடுக்குகளாக எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன



கொக்குத்தொடுவாய்ப் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகவும், ஒன்றின் மீது ஒன்றாக பல அடுக்குகளாகவும் காணப்படுவதால், எத்தனை எலும்புக்கூடுகள் உள்ளன என்பதை இனங்காண்பதில் சவால்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் 2➤



## மக்களின் போராட்டத்தையடுத்து தையிட்டி காணி அளவீடு நிறுத்தம்

யாழ்ப்பாணம் தையிட்டியில் முன்னெடுக்கப்படஇருந்த காணி அளவீட்டுப்பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

காணி அளவீட்டுப் பணிகள் இன்று காலை முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து தெல்லிப்பழை பிரதேச செயலாளரின் அறிவித்தலுக்கு அமைய அளவீட்டுப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

## விசாரணைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் நம்பிக்கையில்லை - அருட்தந்தை சிறில் காமினி

சனல் 4 காணொளி விவகாரம் தொடர்பான விசாரணைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை, என அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சனல் 4 இனால் கடந்த நாட்களில் வெளியிடப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கைகளில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு, ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான குழு ஒன்றை அமைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருப்பதாக அறியக் கிடைத்தது.

அதேபோன்று, அதற்காக நாடாளுமன்றத் 2➤

## செயற்கைக்கோள் தொழில்நுட்ப கண்காணிப்பு - கைச்சாத்தானது!

செயற்கைக்கோள் தொழிநுட்பம் மூலம் நாட்டின் கடல் எல்லைக்குள் நுழையும் கப்பல்களில் இருந்து எண்ணெய்க் கசிவு ஏற்படுகிறதா?, என்பதைக் கண்காணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பிரான்ஸ் அரசாங்கத்திற்கும் இலங்கைக் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் கப்பல்களில் இருந்து எண்ணெய்க் கசிவுகள் கடந்த கடந்த காலத்தில் 2➤

## மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் சான்றுக்கான 50 கிலோ கஞ்சா மாயம்!

யாழ்ப்பாணம், மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குச் சான்றுப் பொருளான 50 கிலோ கஞ்சா மாயமாகியுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் வழக்குச் சான்றுப் பொருட்களுக்குப் பொறுப்பான அதிகாரியினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சா தொடர்பான வழக்கு விசாரணைகள் 2➤


வடக்கின் தண்டவாளங்கள் களனிவெளிக்கு போகின்றன 03

மொராக்கோ நிலநடுக்கம் மரணம் 2,500 ஐ நெருங்கியது! 05

கடலையின் போர்வையில் உளுந்து கடத்தல்! 06

நல்லூர் உற்சவத்தில் இரத்தான முகாம்! 06



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழில் போதைப் பொருள் விவகாரத்தில் உணர்வு ரீதியான செயற்பாடு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலான குழு ஒன்றினை அமைத்து, இணைந்த நடவடிக்கையினை மேற்கொள்ளவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொலிஸார், மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளடக்கப் பட்டுள்ள குறித்த குழுவின் ஊடாக, தகவல்களைப் பரிமாறி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தினார்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போதைப் பொருள் பாவனை என்பது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தினையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றமையினால், அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் அதிகாரிகள் உணர்வு ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (04)

## குருந்தூர் மலையில் இடையூறு வினோ எம்.பி.க்கு அழைப்பாணை

எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கத்திற்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில், பூசை வழிபாடு களுக்காகச் சென்ற பௌத்த குருமாரின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவமானப்படுத் திய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, சில பிக்குகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கமைவாக, முல்லைத்தீவுப் பொலிசாரினால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு வழக்குத் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், குறித்த வழக்குத் தொடர்பாக எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத் தீவு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கத்திற்கு முதல் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (04)

## தீர்மானத்தை தொடர்ந்தும் நிராகரிக்கின்றோம் ஜெனீவாவில் மீண்டும் அறிவித்தது இலங்கை

46 கீழ் 1 மற்றும் 51 கீழ் 1 தீர்மானத்தை தொடர்ந்தும் நிராகரிப்பதாக இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் மீண்டும் அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான உரையாடலின்போதே ஜெனிவாவுக் கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான ஹிமாலி சுபாஷினி அருணதிலக இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டம் நம்பகத்தன்மையற்ற ஆணை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (04)

## மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுவரும் நிலையில், குறித்த 50 கிலோ கஞ்சா களவாடப்பட்டுள்ளது அல்லது மாயமாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சான்றுப் பொருளே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இது தொடர்பான விரிவான விசாரணைகளை தெல்லிப்பழைப் பொலிசாரும் யாழ் மாவட்ட குற்றத்தடுப் புப் பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (01)

## செயற்கைக்கோள் தொழில்நுட்ப ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாகியிருந்தன. இது கடல் வாழ் உயிரினங்க ளையும் கடல் சுற்றுச்சூழல் அமைப்பையும் கடுமையா கப் பாதித்தது.

இதனையடுத்து, இந்த நிலைமைகளைக் கண் காணிப்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது. (க)

## விசாரணைகள் பாரபட்சமின்றி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுக்குழு ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் தெரியவந்தது.

இன்னுமொரு தெரிவுக்குழு அல்லது ஜனாதிபதி யால் நியமிக்கப்படும் குழுவால் இந்த விசாரணைகள் பாரபட்சமின்றி, நேர்மையாக முன்னெடுக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்தக் கேலியான முயற்சிகளை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம்.

சனல் 4 வெளியிட்டுள்ள தகவல்கள் மற்றும் குற்றச் சாட்டுக்கள் குறித்து மட்டுமல்ல, அதற்கு மேல் விசார ணைகளை மேற்கொண்டு, தெளிவாக, ஆரோக்கிய மாக, பாரபட்சமின்றி ஒழுங்குமுறையான விரிவான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

ஆரோக்கியமான சர்வதேச விசாரணைக் குழுவின் முழுமையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை யின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், என்று அவர் தெரிவித்துள்ளார். (04)

## கொக்குத்தொடுவாய்ப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஊடகங்க ளுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில், 6 ஆம் நாள் அகழ்வாய்வுகள் இன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றன.

இந்த அகழ்வாய்வுகள், முல்லைத்தீவு சட்டவைத் திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ். நிரஞ்சன், தடயவியல் பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலை மையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, நேற்றைய அகழ்வாய்வுகள் தொடர்பாகச் சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, ஐந்தாம் நாள் அகழ்வாய்வுகளில் இரு மனித எலும்புக்கூட்டுத் தொகு திகள் முழுமையாகவும், ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது டன், ஒரு துப்பாக்கி ரவையும் தடயப் பொருளாக மீட் கப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். ஒன்றின் மீது ஒன்று மிக நெருக்கமாகவும், பல அடுக்குகளாகவும் மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் காணப்படுவதாகவும், அதன் காரணமாக எத்தனை மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உள்ளன என்பதைத் தற்போது இனங் காண முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படிப்படியாக அகழ்வுகளை மேற்கொண்டு, மனித எச்சங்களின் மேலுள்ள மண்ணை அகற்றும்போது தான், எத்தனை மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகள் உள்ளன என்பதை இனங்காண முடியும் எனவும், இன்னும் ஓரிரு தினங்களில் எத்தனை எலும்புக்கூட்டுத் தொகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கமுடியும் எனவும் அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. தற்போது மொத்தம் 4 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாகவும், ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 14 மீற்றர் நீளத்திலும், 3 மீற்றர் அகலத் திலும், 1.5 மீற்றர் தொடக்கம் 2 மீற்றர் வரையான ஆழத்திலும் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அத்தோடு, கடந்த சனிக்கிழமையன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தகடு ஒன்று எடுக்கப்பட்டது. அது தொடர்பாக பின்னர் அறியத்தரப்படும், எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்



# சாய்ந்தமருதில் மகாகவி பாரதியார் நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் மற்றும் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம் இணைந்து நடத்திய "மகாகவி பாரதியார் நினைவு தினமும், பரிசளிப்பு நிகழ்வும்" சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்சானின் நெறிப்படுத்தலில், எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிஃப் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி முன்னாள் அதிபரும், சட்டத்தரணியுமான எம்.சி. ஆதம்பாவா பிரதம அதிதியாக கலந்து கொண்டு, ஆசிரியர்களுக்கு முன்மாதிரியான கற்பித்தல் முறைகள் தொடர்பிலும் பாடசாலை ஒழுக்க நெறி தொடர்பிலும் நாட்டின் தற்கால நிலைகள் பற்றியும் சிறப்புரை நிகழ்த்தினார்.

மகாகவி பாரதியார் நினைவு தினப் பிரதான உரையை சிரேஷ்ட இலக்கியவாதியும் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ. பீர் முகம்மட் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபீத், ஓய்வு பெற்ற மூத்த ஆசிரியர் ஏ.எம். இப்ராலெப்பை, சாய்ந்தமருது கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எச். சபீகா, சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. பி. நௌசாத், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி சபை செயலாளர் அஸ்வான் எஸ் மௌலானா, பிரதி செயலாளர் யூ. எல். என். /ஹுதா உமர், வித்தியாலய பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அறநெறிப் பாடசாலைகளுக்கு இராமகிருஷ்ண மிஷினினால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் கிளை, அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பாணமை மற்றும் பொத்துவில் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகணங்களை வழங்கி வருகிறது.

நேற்று முன்தினமும் நேற்றும் பொத்துவில் ஊரணி பாணமை போன்ற பிரதேசங்களில் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இவை வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் இந்தக் கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

# புகையிரத சேவையும் அத்தியாவசியமாகிறது!

இன்று நள்ளிரவு முதல் புகையிரத சேவை அத்தியாவசிய சேவையாக மாற்றப்படும், என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர், இது தொடர்பான யோசனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இதன்படி நாளை முதல் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தவிர்க்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (04)

# வடக்கின் பழைய ரெயில் தண்டவாளங்கள் களனிவெளிக்கு நகர்த்தப்படவுள்ளன



அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் வடக்கு ரயில் பாதையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் தண்டவாளங்கள் உள்ளிட்ட பயன்படுத்தக் கூடிய பாகங்களைக் கொண்டு, களனிவெளி ரயில் பாதையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில், ஹோமாகம புகையிரத நிலைய வளாகத்தில் இத்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கமைய, மருதானை முதல் அவிசாவளை வரையிலான 59 கிலோமீற்றர் தூரப் புகையிரதப் பாதையைப் புனரமைப்பதற்கு 2,359 தண்டவாளங்களும் 25,728 கொங்க்கிரீட் ஸ்லிப்பர் கட்டைகளும் பயன்படுத்தப்படவுள்ளன. அதற்காக 127 கோடி ரூபாவைச் செலவிட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்த ரயில் பாதையின் மோசமான நிலை காரணமாக நிலவுகின்ற வேகக் கட்டுப்பாடுகளை, காலப்போக்கில் நீக்குவதற்கான திட்டத்தின் ஓர் அங்கமாகவே மேற்படி புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ரெ-10)




JAFFNA'S FIRST HOUSING & CONSTRUCTION EXHIBITION
JAFFNA HOUSING & CONSTRUCTION EXHIBITION 2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு மற்றும் வீட்டு உபகரணங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியா - சவுதி அரேபியாவுக்கிடையே எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின



முதலீடு, எரிசக்தி, தொழிநுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவாக்குவது தொடர்பாக இந்தியா மற்றும் சவுதி அரேபியா நாடுகளுக்கு இடையே 8 ஒப்பந்தங்கள் நேற்று கையொப்பமாகியுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சவுதி அரேபிய பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மான் முன்னி லையில் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

டில்லியில் கடந்த 9, 10 ஆம் தேதிகளில் ஜி-20 உச்சி மாநாடு நடைபெற்றது. இக்கூட்டமைப்பில் சவுதி அரேபியா அங்கம் வகிக்கும் நிலையில், டில்லி உச்சி மாநாட்டில் மொகமட் பின் சல்மான் பின் அப்துல் அசீஸ் அல் சௌத் கலந்துகொண்டார்.

இந்த நிலையில், இந்தியா - சவுதி அரேபியா நாடுக ளுக்கு இடையிலான வியூக கூட்டாண்மை கவுன்சிலின் முதல் கூட்டம், டில்லியில் நேற்று திங்கட்கிழமை நடை பெற்றது. இந்தியப் பிரதமர் மோடி, மொகமட் பின் சல்மான் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான கச்சா எண்ணெய், எரிவாயு சார்ந்த தற்போதைய கூட்டுறவை மேலும் விரிவாக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்துடன், மகாராஷ்டிரத்தில் 50 பில்லியன் அமெ-ரிக்க டொலர்கள் மதிப்பீட்டில் (இந்திய மதிப்பில் சுமார் 4 லட்சம் கோடி) செயல்படுத்தப்படும் மேற்குக் கடற்கரை எண்ணெய்ச் சுத்திகரிப்புத் திட்டப் பணிகளை விரைவு படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

எண்ம மயமாக்கல், முதலீடு உள்பட பல்வேறு துறை களில் ஒத்துழைப்பை அதிகரிக்க இரு நாடுகளுக்கும் இடையே 8 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின என்று இந்திய வெளியுறவு அமைச்சக (அயலக இந்திய விவ-காரங்கள்) செயலர் ஔசப் சயீத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியபோது, சவுதி அரேபிய எண்ணெய் நிறுவனம், அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் மற்றும் இந்திய நிறுவனங்களின் முத்தரப்பு ஒத்துழைப்பிலான மேற்கு கடற்கரை எண்ணெய்ச் சுத்-திகரிப்புத் திட்டத்தை விரைவுபடுத்த இருதரப்பிலும் முழு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. எரிசக்தி, பாதுகாப்பு, கல்வி, தொழிநுட்பம், போக்குவரத்து, சுகாதாரம், சுற்றுலா, கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதி-கரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மின்சாரம், எரிவாயு, கண்ணாடி இழை கட்டமைப்பு திட்டங்களில் ஒத்துழைப்பது குறித்து இரு தலைவர்க ளும் விரிவாக ஆலோசித்தனர். சவுதி அரேபிய தரப்பில் உறுதியளிக்கப்பட்ட 100 பில்லியன் அமெரிக்க டொலர் கள் (இந்திய மதிப்பில் சுமார் 8.2 லட்சம் கோடி) முத லீடுகளை நிர்வகிப்பதில் உதவ, கூட்டுப் பணிக் குழுவை அமைக்க இருதரப்பும் முடிவு செய்துள்ளன. இதில் பாதியளவு முதலீடு மேற்குக் கடற்கரை எண்ணெய்ச் சுத்திகரிப்புத் திட்டத்துக்கானதாகும். இத்திட்டப் பணி களைக் கண்காணிக்க ஒரு குழுவை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது, என்று குறிப்பிட்டார்.

பல்வேறு முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்து ழைப்பை அதிகரிக்கும் நோக்கில், கடந்த 2019ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இந்தியா-சவுதி அரேபியா வியூகக் கூட்டாண்மை கவுன்சிலின் முதல் கூட்டமும் தற்போது நடைபெற்றுள்ளது.

முன்னதாக, சவுதி அரேபிய பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மானுக்கு இந்தியக் குடியரசுத் தலை வர் மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது பேசிய மொகமட் பின் சல்மான், 'இந்தியப் பயணம் மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. ஜி-20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக இந்தியாவுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். சவுதி அரேபியா மற்றும் இந்தியாவின் சிறந்த எதிர்காலத்துக்காக இருதரப்பும் தொடர்ந்து ஒருங்கிணைந்து பணியாற்றும்' என்றார். (04)

# மொராக்கோ நில நடுக்க மீட்புப் பணிகளில் வெளிநாட்டுக் குழுவினரும் இணைந்தனர்



மொராக்கோவில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும் மீட்புப் பணிகளில் வெளிநாட்டுக் குழுவினரும் நேற்று திங்கட்கிழமை முதல் இணைந்து கொண்டுள்ளனர்.

இதற்கிடையே, இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 2,500 ஐ நெருங்கியதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மொராக்கோவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மராகெஷ்-சாஃபி பிராந்தியத்தில் இடிபாடுகளில் உயிருடன் சிக்கியிருக்கக் கூடியவர்களைக் கண்டறிந்து மீட்பதற் கான பணிகளில் அந்த நாட்டுப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தலத் நியாகூப் என்ற பகுதியில் 12 அவசரகால ஊர் திகள், ஏராளமான ராணுவ வாகனங்களின் உதவி யுடன் ராணுவத்தினர், பொலிஸார், பொதுமக்கள் என இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்க ளுடன், ஸ்பெயினிலிருந்து வந்திருந்த 30 தீயணைப்பு வீரர்கள், ஒரு மருத்துவர், இரண்டு தொழிநுட்ப வல்லு நர்களும் தேடுதல் பணியில் இணைந்துகொண்ட னர்.

அங்கிருந்து 70 கி.மீ. தொலைவிலுள்ள மற்றொரு பாதிப்புப் பகுதியிலும், ஸ்பெயினிலிருந்து வந்திருந்த மீட்புக் குழுவினர் உள்நாட்டுக் குழுவினருடன் இணைந்து, இடிபாடுகளில் உயிருடன் சிக்கியிருக் கக்கூடியவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே, இந்த நிலநடுக்கத்தில் இதுவரை 2,497 பேர் உயிரிழந்துள்ளதாக திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரி விக்கின்றன. இது தவிர, இடிபாடுகளில் சிக்கி 2,476 க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும், அவர்களில் சுமார் 1,400 பேரது நிலை கவலைக்கிடமாக உள்ள தாகவும் அதிகாரிகள் கூறினர்.

வடமேற்கு ஆபிரிக்க நாடான மொராக்கோவின் அட்லஸ் மலைத் தொடர் பகுதியில் அமைந்துள்ள மராகெஷ்- சாஃபி பிராந்தியத்தில் வெள்ளிக்கிழமை இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8 அலகுகளாகப் பதிவானதாக அமெ ரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

மொராக்கோவின் நான்காவது பெரிய நகரான மராகெ/க்கு சுமார் 72 கி.மீ. தொலைவிலுள்ள மலைப் படுகையில் 18.5 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஸ்பெயின், போர்ச்சுகல், அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகளிலும் உண ரப்பட்டன. நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

நிலநடுக்கத்தால் சாலைகள் பலத்த சேதமடைந்த தால் அது மையம் கொண்டிருந்த பகுதியைச் சுற்றி லும் உள்ள மலைக் கிராமங்கள் நாட்டின் மற்ற பகுதி களிலிருந்து துண்டிக்கப்பட்டன. இது, மீட்புப் பணிகளில் மேலும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இடிபாடுகளிடையே உயிருடன் சிக்கியிருப்பவர்களைத் தேடும் பணியிலும், உயிரி ழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியிலும் ஈடு பட்டுள்ள மொராக்கோ மீட்புக் குழுவினருடன் வெளி நாட்டுக் குழுவினரும் தற்போது இணைந்துள்ளனர்.

மொராக்கோ வரலாற்றில் 1755 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள மிகச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இது என்று கூறப்படுகிறது. ஆபிரிக்க புவித் தகடும், யூரோ-ஆசிய புவித் தகடும் ஒன்றையொன்று சந்திக் கும் அட்லஸ் மலைத்தொடர் பகுதியில் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன.

கடந்த 2004 ஆம் ஆண்டில் மொராக்கோவின் அல்-ஹொசீமா நகரில் ஏற்பட்ட 6.3 ரிச்டர் அளவு கொண்ட நிலநடுக்கத்துக்கு 628 பேர் பலியாகினர் என்பதும், அண்டை நாடான அல்ஜீரியாவில் கடந்த 1980ஆம் ஆண்டு ஏற்பட்ட 7.3 ரிச்டர் அளவு கொண்ட நிலநடுக்கத்தில் சுமார் 2,500 பேர் பலியாகினர் என்ப தும் நினைவுகூரத்தக்கன. (04)

# சூடான் தலைநகரில் விமானத் தாக்குதல் 40 பேர் உயிரிழப்பு - பலருக்குக் காயம்!



சூடான் தலைநகர் கார்ட்டூமில் நடத்தப்பட்ட விமா னத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்துள்ளதாகத் தக வல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டில் செயல்பட்டு வரும் தன்னார்வ அமைப்பான 'ரெசிஸ்டன்ஸ் கமிட்டி' வெளி யிட்டுள்ள அறிக்கையில், கார்ட்டூமில் உள்ள குவோ ரோ சந்தையில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர். கடந்த ஏப்ரல் முதல் நடைபெற்று வரும் மோதலில் இதுதான் ஒரே தாக்குதலில் ஏற்பட்டுள்ள மிக அதிக உயிரிழப்பு ஆகும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத் தாக்குதலை ராணுவம்தான் நடத் தியது என்று துணை ராணுவப் படையான ஆர்எஸ்எப் குற்றஞ்சாட்டுகிறது. எனினும், இந்தக் குற்றச்சாட்டை ராணுவம் மறுத்துள்ளது.

வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் அல்-புர்ஹான் தலைமையிலான ராணுவத்துக்கும், மொகமட் ஹம் தான் டகாலோ தலைமையிலான ஆர்எஸ்எப் துணை ராணுவப் படைக்கும் இடையே அதிகாரப் போட்டி காரணமாக கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் மோதல் நடந்து வருகிறது. இதில், இதுவரை நான்காயிரத்தி லிருந்து பத்தாயிரம் பேர் வரை உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற் காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற் சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை. (04)

# உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தேர்தல் ஆளும் ரஷ்ய ஆதரவுக் கட்சி வெற்றிபெற்றதாக அறிவிப்பு

உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் நடைபெற்ற பிராந்தியத் தேர்தலில் ஆளும் ரஷ்ய ஆதரவுக் கட்சி வெற்றி பெற்றதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இது குறித்து ரஷ்ய மத்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லுஹான்ஸ்க், கெர்சான், ஸபோரிஷியா, டொனட்ஸ்க் ஆகிய 4 பிராந்தியங்களிலும் கடந்த வார இறுதியில் தேர்தல் நடைபெற்றது. அந்த 4 பிராந்தியங்களிலும் ஐக்கிய ரஷ்யக் கட்சி அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் உக்ரைனை ஆட்சி செலுத்தி வந்த அதிபர் விக்டர் யானுகோவிச்சுக்கு எதிராக மேற்கத்திய ஆதரவாளர்கள் தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து, அவரது ஆட்சி கவிழ்ந்தது. அதனைத் தொடர்ந்து, கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் அரசுப் படையினருக்கு எதிராகச் சண்டையிட்டு கணிசமான பகுதிகளைக் கைப்பற்றினர். அப்போது ரஷ்யாவும் உக்ரைனின் கிரீமியா பகுதி மீது படையெடுத்து அந்தத் தீபகற்பத்தைத் தங்களுடன் இணைத்துக்கொண்டது.

இந்தச் சூழலில், நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களிலுள்ள இந்த 4 பிரதேசங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, அந்தப் பிரதேசங்களை தங்களுடன் இணைத்துக்கொள்வதாக ரஷ்யா கடந்த ஆண்டு செப்டம்பரில் அறிவித்தது. இந்த நிலையில், தற்போது அந்தப் பிராந்தியங்களில் தங்களது ஆதிக்கத்தை வலுப்படுத்தும் வகையில் தேர்தலையும் அது நடத்தியுள்ளது.

முன்னதாக, ஆக்கிரமிப்பு பிராந்தியங்களில் சர்ச்சைக்குரிய வகையில் ரஷ்யா தேர்தல் நடத்துவதற்கு பின்லாந்திலுள்ள ஐரோப்பிய நாடுகளின் உச்சநிலை மனித உரிமை அமைப்பான ஐரோப்பிய கவுன்சில் கண்டனம் தெரிவித்தது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், உக்ரைன் பிராந்தியங்களில் ரஷ்யா நடத்தும் தேர்தல், சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரானது, என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

உக்ரைன் நாடாளுமன்றமும், இந்தத் தேர்தலை நடத்துவது ரஷ்யாவின் மக்கள் விரோத நடவடிக்கை எனவும், அந்தத் தேர்தலின் முடிவுகள் அங்கீகரிக்கப்படாது எனவும் அறிவித்திருந்தது. இந்த நிலையில், 4 பிராந்தியத் தேர்தல்களிலும் ரஷ்ய ஆதரவுக் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# கூடைப்பந்தாட்ட தேசியமட்ட போட்டியில் காரைதீவு அணி



(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் கழக மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகள் காரைதீவு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இப்போட்டிகளில் இறுதிப் போட்டியில் காரைதீவு பிர தேசசெயலகப் பிரிவு அணி, கல்முனை வடக்கு பிர தேசச் செயலக அணியுடன் மோதியது. அதில் காரைதீவு அணி வெற்றி பெற்றது. இதன் மூலமாக, அடுத்த மாதம் கொழும்பில் இடம் பெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள அந்த அணி தெரிவாகியுள்ளது.

காரைதீவு பிரதேசசெயலகப் பிரிவிலிருந்து ராமகிருஷ்ணா இளைஞர் அணியினர் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி, அதில் வெற்றியும் பெற்றனர்.

காரைதீவு இராமகிருஷ்ண இளைஞர் அணி ஏலவே ஆண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியிலும் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.




# கடலையின் போர்வையில் உளுந்து பெறுமதி ரூபாய் மூன்று கோடியாம்!

சுங்கக் கண்காணிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று, கொழும்புத் துறைமுக சுங்கப் பிரிவில், ஒருகொடவத்தை கொள்கலன் முனையத்தில் வைத்து, சுமார் 3 கோடி பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான உளுந்துத் தொகையைக் கைப்பற்றியதாக, சுங்க ஊடகப் பிரிவின் பேச்சாளர் சீவலி அளுத்கொட தெரிவித்தார்.

இந்த உளுந்து அடங்கிய இருபது அடி நீள கொள்கலன், கொழும்பு மருதானை பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரினால் கடந்த 26 ஆம் திகதி இந்தியாவின் சென்னையில் இருந்து கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டது என அறிய வந்துள்ளது.

இந்த கொள்கலனின் கதவுக்கு அருகில், தலா 100 கிலோ எடை கொண்ட இருநூற்று இருபத்தெட்டு எனக் குறிப்பிடப்பட்ட மூடைகள் கட்டப்பட்டிருந்த நிலையில் வைக்கப்பட்டிருந்துள்ளன. எனினும், சுங்க அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து இந்த கொள்கலனை மேலும் திறந்து உள்ளே சோதனையிட்ட போது மேலும் கடலை எனும் போர்வையில் 574 உளுந்து மூடைகள் அங்கு மறைத்து வைத்திருப்பதை அவர்கள் கண்டுபிடித்தனர்.

சுமார் மூன்று கோடியே பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள 17,200 கிலோ உளுந்து மூடைகளை சுங்க அதிகாரிகள் இதன்போது கைப்பற்றியிருந்தனர்.

துறைமுகத்திலிருந்து மேற்படி கொள்கலன் விடுவிக்கப்பட்டிருந்தால் இலங்கைக்கு சுமார் ஐம்பத்திரண்டு இலட்சம் ரூபா வரி இழப்பு ஏற்பட்டிருக்கும் என சுங்கப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை சுங்கத்துறை குறித்த இறக்குமதியாளரை அழைத்து இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (ரெ-12)

# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இரத்தான முகாம் நடைபெறுகிறது!




நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு “உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்” எனும் கருப்பொருளில் யாழில் இரத்தான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நல்லூர் சப்பறத் திருவிழாவான இன்றைய தினம், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும், நாளை தேர்த் திருவிழாவின் போதும், நாளை மறுநாள் தீர்த்தத் திருவிழாவின் போதும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளதோடு, பூங்காவனத் திருவிழாவான 15 ஆம் திகதி மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நல்லூரிலுள்ள யாழ். மாநாகர சபையின் சுகாதார மருத்துவப் பணிமனையில் இடம்பெறவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0772 105 375 மற்றும் 0766 242 311 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்த முடியும் என அறியத்தரப்பட்டுள்ளது. (க)

# வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் புதிய சுற்றுச்சூழல் பூங்காக்கள் உருவாக்கப்படும்!



நாட்டின் வனத்துறை வருமானத்தை அதிகரிக்கும் வகையில் புதிய சுற்றுச்சூழல் பூங்காக்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது சூழலியல் பூங்காவாக அமையப்பெற்றுள்ள கல்ஓய மற்றும் ஹூருலு சூழலியல் பூங்காக்களுக்கு மேலதிகமாக, இதுவரை சூழலியல் பூங்காக்களாக பெயரிடப்படாத சிங்கராஜா வனப்பகுதி, கன்னெலிய, உடவத்த கெலே மற்றும் எல்ல ஆகிய இடங்களை சூழலியல் பூங்காக்களாகப் பெயரிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், இந்த வனப் பகுதிகளுக்குச் சென்று சுற்றுச்சூழலின் அழகை ரசிக்க வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் வருடத்திற்குள் மேலும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் புந்தல, நக்கிள்ஸ் மற்றும் சிங்கராஜா ஆகிய உயிர்க்கோளக் காப்பகங்கள் மற்றும் உடவளவ தேசியப் பூங்கா ஆகியனவற்றையும் இயற்கை சார்ந்த சுற்றுலாத் தலங்களாக அமைப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே, புதிய பயிற்சி நிலையங்களைப் பயன் படுத்தி வெளிநாடுகளுடன் இணைந்து பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள வனவிலங்கு திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சிச் சாலை ஆகியவற்றின் வருமானம் 2023 இன் முதல் 6 மாதங்களில் மாத்திரம், 2,148.6 மில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெ-11)




## பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தற்கொலை தடுப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படும் தற்கொலை தடுப்புத் தினத்தைப் பிரதிபலிக்கும் வகையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்களின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைய, கல்முனை பிராந்திய உள நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல் அவர்களினால் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி. அப்துல் வாஜித் அறிமுக உரையை நிகழ்த்தி இருந்தார்.

குறித்த நிகழ்வில் விசேட வளவாளராகக் கலந்து கொண்ட டொக்டர் எம்.ஜே.நௌபல், தற்போது தற்கொலைகள் சமுதாய மட்டத்தில் அதிகரித்துச் செல்வதாகவும் இதற்கு பொருளியல், சமூகவியல் காரணிகள் துணை நிற்பதாகவும் இதனைக் கண்டறிந்து சிறந்த உள மருத்துவத்தினை வழங்கும்போது தற்கொலைகள் உள்ளிட்ட ஏனைய சமூகவியல் பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்றும் தெரிவித்தார். இது தொடர்பாகப் பாலமுனை இடைத்தங்கல் பிரிவினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்தார்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய பிரதிப் பணிப்பாளர், சமூக வட்டத்தில் ஆன்மீகக் கருத்துக்களை அதிகம் பரப்புவதன் ஊடாகவும் சமய நிறுவனங்களின் அனுசரணையைப் பெறுவதன் ஊடாகவும் தற்கொலைகளைக் குறைக்க முடியும் என்று தான் நம்புவதாகவும், மக்கள் தற்காலத்தில் அதிக பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகுவதனால் அதிக மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனைச் சீர் செய்வதற்கு உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் மருந்துகள் உற்பத்தி என தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்து, செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பணிப்பாளர் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பணிமனையின் பிரிவுத் தலைவர்களும் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கு கொண்டிருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2023இல் வெளியிடப்பெற்றது.